
கல்விக்கடன்
கல்வி உதவித்தொகை
வழிகாட்டி
www.StudyGuideIndia.com

# கல்விக்கடன் என்பது என்ன?

இந்தியாவின் மிகப் பெரிய தேசிய வளம், அதன் இளைஞர்களும் அவர்களுடைய மூளைத் திறனும்தான். ஆகவே, நன்கு படிக்கிற மாணவர்கள் தொடர்ந்து கல்வி கற்பதில் பணப் பிரச்னைகள் ஏற்பட்டால் அவர்களுக்கு உதவுவதற்காக நமது மத்திய அரசாங்கம் ஒரு நல்ல ஏற்பாட்டைச் செய்துள்ளது. 27 தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின்வழியே அவர்கள் கல்விக் கடன் பெற்றுக்கொள்ளலாம்.

இதற்கென்று நம் அரசாங்கம் வகுத்திருக்கும் நெறிமுறைகள், வழிகாட்டுதலின்படி நிதி நிறுவனங்கள் கல்விக் கடன்களை வழங்குகின்றன.

இதுதவிர, ஒவ்வொரு வங்கியும் கடன் பெறுவதற்குச் சில தகுதிகளை வகுத்திருக்கிறது, வட்டி விகிதம், அதனைத் திருப்பிச் செலுத்தும் விதம் போன்றவையும் மாறுபடலாம்.

எந்த வகைப் படிப்புக்கும் நீங்கள் கல்விக் கடன் பெறலாம். உதாரணமாக, பள்ளி, பட்டப்படிப்பு, முதுநிலைப் பட்டப்படிப்பு, முனைவர் (டாக்டர்) பட்டப்படிப்பு. இந்தியாவில் படிக்கிறவர்கள், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் சேர்ந்து படிக்கிறவர்கள் எல்லோருக்கும் கல்விக் கடன்கள் வழங்கப்படுகின்றன. ஒரே நிபந்தனை, அந்த மாணவர் நன்கு படிக்கிறவராக இருக்கவேண்டும், அவருடைய குடும்ப நிதி நிலைமை காரணமாகப் படிப்பைத் தொடர்வதற்குக் கடன் தேவைப்படுகிறவராக இருக்கவேண்டும்.

கல்விக்கடன் உறுதி (அப்ரூவ்) செய்யப்பட்டவுடன், உங்களுடைய நிதி நிறுவனம் உங்களது படிப்பை உறுதி செய்யும். ஆனால் அதன்பிறகு நீங்கள் கஷ்டப்பட்டுப் படிக்கவும், வேலை செய்யவும், கடனைத் திருப்பிச் செலுத்தவும் தயாராக இருக்கவேண்டும்.

## யாருக்கெல்லாம் கல்விக் கடன் வழங்கப்படுகிறது?

நீங்கள் இந்தியக் குடிமகனாக இருக்கவேண்டும்.

1. இந்தியாவிலோ வெளிநாட்டிலோ நடைபெறும் ஒரு நுழைவுத்தேர்வு அல்லது அதேபோன்ற முறையின்மூலம் ஒரு குறிப்பிட்ட படிப்பைப் படிக்கத் தேர்வாகியிருக்கவேண்டும்

2. நீங்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் மதிப்பெண் வாங்கியிருக்கவேண்டும் உதாரணமாக குஇ/குகூ வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு 50%, மற்றவர்கள் 60%

3. சில வங்கிகளில் வயது வரம்பும் இருக்கலாம். உதாரணமாக, 16 முதல் 28

www.StudyGuideIndia.com

4. *சில வங்கிகள் முழு நேரப் படிப்புக்குமட்டுமே கடன் வழங்குகின்றன. அல்லது சில குறிப்பிட்ட படிப்புகளுக்குமட்டுமே கடன் வழங்குகின்றன. உதாரணமாக, கம்ப்யூட்டர் கோர்ஸ்கள்!*

**இதற்கு என்ன வயது வரம்பு?** *30 வயது*

**நமது கல்விக் கடன் அப்ரூவ் செய்வதற்கு முன்னால் அவர்கள் எந்தெந்த விஷயங்களைக் கவனிக்கிறார்கள்?**

1. *நீங்கள் தேர்ந்தெடுக்கும் படிப்பு*
2. *நீங்கள் தேர்ந்தெடுக்கும் கல்வி நிறுவனம்*
3. *உங்களுக்குத் தேவைப்படும் தொகை*
4. *இதுவரையிலான உங்களுடைய கல்வித் திறமை*
5. *நீங்கள் இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தும் தகுதி கொண்டவரா? (இதைக் கண்டறிவதற்காக அவர்கள் உங்களிடமும் உங்களுடைய குடும்பத்தினரிடமும் பேச்சுவார்த்தை நடத்துவார்கள்)*
6. *குடும்பத்தின் வருடாந்திர வருமானம்*
7. *குடும்பச் சொத்துகள் போன்றவ*

**எந்தெந்தப் படிப்புகளுக்குக் கல்விக் கடன் கிடைக்கும்?**

**இந்தியப் படிப்புகள்:**

- *பள்ளிப் படிப்பு* (+2 *வரை*)
- *பட்டப் படிப்பு* : B.A., B.Com. B. Sc., *போன்றவை*
- *முதுநிலைப் படிப்புகள்: மாஸ்டர் டிகிரி மற்றும் பி.ஹெச்.டி* (*டாக்டர்* / *முனைவர்*)
- *தொழில்முறைப் படிப்புகள்: பொறியியல் (எஞ்சினியரிங்), விவசாயம், மருத்துவம், கால்நடை மருத்துவம், சட்டம், பல் மருத்துவம், மேலாண்மை, கணினித்துறை*
- *பல்கலைக்கழகங்கள் அல்லது எலக்ட்ரானிக்ஸ் துறையினால் அங்கீகரிக்கப்பட்ட சிறந்த நிறுவனங்களில் வழங்கப்படும் கம்ப்யூட்டர் சான்றிதழ் படிப்புகள்*
- IIT, IIM, XLRI, IISc *போன்ற நிறுவனங்களால் வழங்கப்படும்* CA, ICWA, CFA *போன்ற படிப்புகள்*

www.StudyGuideIndia.com

- தேசிய நிறுவனங்கள் மற்றும் பிற முக்கியமான தனியார் நிறுவனங்களால் வழங்கப்படும் படிப்புகள்
- சிறந்த வெளிநாட்டு நிறுவனங்களால் இந்தியாவில் வழங்கப்படும் படிப்புகள்
- அங்கீகாரம் பெற்ற கல்வி நிறுவனங்களில் நிகழ்த்தப்படும் மாலை நேரப் படிப்புகள்
- UGC, AICTE, AIBMS, ICMR போன்ற அரசு சார்ந்த நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகள், பல்கலைக்கழங்கள் வழங்கும் மற்ற பட்டம் அல்லது பட்டயப் படிப்புகள்

**வெளிநாட்டுப் படிப்புகள்:**

1. லண்டனில் உள்ள CIMA, அமெரிக்காவில் உள்ள CPA போன்றவை வழங்கும் படிப்புகள்
2. இளநிலை: அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் பணி சார்ந்த தொழில்முறை / தொழில்நுட்பப் படிப்புகள்
3. முதுநிலை: MCA, MBA, MS போன்றவை

**எனக்கு எவ்வளவு கல்விக் கடன் கிடைக்கும்?**

பொதுவாக இந்தியப் படிப்புகளுக்கு ரூ 15 லட்சம் வரையும், வெளிநாட்டுப் படிப்புகளுக்கு ரூ 25 லட்சம் வரையும் கல்விக் கடன் வழங்கப்படுகிறது.

**தபால்வழி / பகுதி நேரப் படிப்புக்குக் கடன் கிடைக்குமா?**

பெரும்பாலான வங்கிகள் பகுதி நேர / தபால்வழிப் படிப்புகளுக்குக் கல்விக் கடன் வழங்குவதில்லை. சில வங்கிகள், சில குறிப்பிட்ட தொழில்முறைப் படிப்புகளுக்குக் கடன் வழங்குகின்றன. ஆனால் உங்களுடைய கல்லூரி, படிப்பு இரண்டும் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். நீங்கள் உங்களுடைய படிப்பு எது என்று தேர்ந்தெடுத்தவுடன் உள்ளூர் வங்கியைத் தொடர்பு கொண்டு பேசுங்கள்.

**இந்தக் கடனை நீங்கள் திருப்பிச் செலுத்துவது எப்படி, எப்போது?**

நீங்கள் படிப்பை முடிக்கும்வரையில் கல்விக் கடனைத் திரும்பச் செலுத்தவேண்டியதில்லை. படிப்பை முடித்தபின்னர் நீங்கள் ஒரு நல்ல வேலையைத் தேடிக் கொள்வதற்காக 6 முதல் 12 மாதம்வரை கால அவகாசம் வழங்கப்படும். அதன்பிறகு கடனைத் திரும்பச் செலுத்தினால் போதுமானது.

www.StudyGuideIndia.com

**ஒருவேளை நான் என்னுடைய படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டால்? அல்லது குறிப்பிட்ட கால அவகாசத்தில் எனக்கு ஒரு நல்ல வேலை கிடைக்காவிட்டால்? அப்போது என்னுடைய கல்விக் கடன் என்ன ஆகும்?**

இந்தச் சூழ்நிலைகளில் நீங்கள் உடனடியாகக் கடனைத் திரும்பச் செலுத்தத் தொடங்கவேண்டும். சில நிதி நிறுவனங்கள் நீங்கள் படிப்பை முடிக்கும்வரை காத்திருப்பார்கள். ஆனால் அது மிக அபூர்வமாகவே நடக்கும்.

**படிக்கும்போது என்னுடைய கடன் எந்த வட்டி விகிதத்தில் அதிகரிக்கும்?**

நீங்கள் படிப்பை முடிக்கும்வரை சாதாரண வட்டி விகிதம்தான் கணக்கிடப்படும். அது ஒரு தனிக் கணக்கில் வைக்கப்பட்டிருக்கும். இந்தக் காலகட்டத்தில் நீங்கள் விரும்பினால் அந்த வட்டியைமட்டும் திரும்பச் செலுத்தலாம். அல்லது செலுத்தாமலும் இருக்கலாம். உங்களுக்கு வேலை தேடிக்கொள்ள வழங்கப்படும் கால அவகாசம் முடிந்தபிறகு, அந்த வட்டி முழுவதும் அசல் கணக்கில் மாற்றப்படும். அப்போது இந்த மொத்தத் தொகைக்கும் கூட்டு வட்டி கணக்கிடத் தொடங்குவார்கள்.

சில மாணவர்களுடைய பெற்றோரின் ஆண்டு வருவாய் ரூ 4.5 லட்சத்தைவிடக் குறைவாக இருக்கலாம். அப்போது அவர்கள் பெற்ற கடனுக்கு Pause Period (Moratorium) எனப்படும் காலகட்டத்தில் முழு வட்டிச் சலுகை வழங்கப்படும். இந்தத் திட்டம் 2009-10ம் கல்வி ஆண்டிலிருந்து அமலுக்கு வருகிறது. இதைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறவர்கள் இதற்கென்றே மாநில அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அமைப்புகளிடம் வருவாய்ச் சான்றிதழ் பெறவேண்டும். அரசாங்கம் ஒவ்வொரு மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமைச் செயலாளர்களுக்கு இதுபற்றித் தகவல் தெரிவித்துள்ளது, அவர்கள் ஒவ்வொரு மாவட்டம் அல்லது அதற்குக் கீழே உள்ள நிலைகளில் இதற்கான அமைப்புகளை நியமிப்பார்கள்.

IBAவைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர் வங்கிகளும் இந்தத் திட்டத்தை அமல்படுத்தும்படி அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். கல்விக் கடனுக்குக் கணக்கிடப்பட்டு வசூலிக்கப்பட்ட வட்டித் தொகையைத் திரும்பப் பெறுவதற்கான IBA உறுப்பினர் வங்கிகளில் கனரா வங்கி முக்கியப் பங்கு வகிக்கிறது. தகுதி உள்ள மாணவர்கள் அவர்கள் கடன் பெற்ற வங்கிக் கிளையைத் தொடர்பு கொண்டு முறைப்படி விண்ணப்பிக்கலாம். பலன் பெறலாம்.

www.StudyGuideIndia.com

**வட்டி விகிதம் எவ்வளவு? இதற்கு வருமான வரிச் சலுகை உண்டா? அதை நான் எப்படிப் பெறுவது?**

- *வட்டி விகிதம்: கல்விக் கடனுக்கான வட்டி விகிதம் 10% முதல் 15%வரை வசூலிக்கப்படுகிறது. இது நீங்கள் தேர்ந்தெடுக்கும் படிப்பு / வங்கியைப் பொறுத்து மாறும்*

*வருமான வரிச் சலுகை:*

*இந்திய வருமான வரிச் சட்டத்தின்படி நாம் நமது கல்விச் செலவுகளுக்கு இரண்டு வகைகளில் சலுகை பெறலாம். அவை:*

1. 80E *பிரிவின்படி ஒருவர் தன்னுடைய குழந்தைகளுக்குச் செலுத்தும் பயிற்சிக் கட்டணத்து(டியூஷன் ஃபீஸ்)க்கு ரூ* 1 *லட்சம்வரை வருமான வரிச் சலுகை உண்டு*
2. *ஒருவர் தானோ அல்லது தன் கணவர் / மனைவி / குழந்தைகளோ படிப்பதற்காகக் கல்விக் கடன் வாங்கியிருந்தால், அதற்குச் செலுத்தும் வட்டித் தொகைக்கு* 80E *பிரிவின்படி எந்த வரம்புகளும் இல்லாமல் வரிச் சலுகை உண்டு*

*மற்றபடி கல்விக் கடன்களுக்கு நேரடி வரிச் சலுகை எதுவும் இல்லை.*

*சமீபத்தில் அறிமுகமாகியுள்ள ஒரு புதிய சட்டத்தின்படி, கல்விக் கடனுக்குச் செலுத்தும் வட்டித் தொகை ஒருவருடைய வருமானத்திலிருந்து கழித்துக்கொள்ளப்படும், அதன்பிறகே வரி கணக்கிடப்படும். இதற்கு அதிகபட்ச வரம்பு எதுவும் கிடையாது. அதேசமயம் நீங்கள் எடுத்துள்ள கடனின் அசல் தொகைக்கு வரிச் சலுகை எதுவும் வழங்கப்படுவதில்லை. நீங்கள் எடுத்துள்ளது நீண்ட காலக் கடன் என்றால், எட்டு வருடத்துக்குள் அதனைத் திரும்பச் செலுத்திவிடுவது நல்லது. அதன்பிறகு உங்களுடைய வட்டித் தொகைக்கும் வரிச் சலுகை கிடைக்காது. இதேபோல் நீங்கள் உங்களுடைய நிறுவனம், குடும்பத்தினர் அல்லது நண்பரக்ளிடமிருந்து பெறும் கடனுக்கும் வரிச் சலுகைகள் இல்லை.*

*ஒருவேளை நீங்கள் வீட்டையோ, நகையையோ, வேறு சொத்துகளையோ வைத்துக் கடன் வாங்கியிருந்தால், அப்போதும் வரிச் சலுகை உண்டு. ஆனால் இந்தக் கடன் உங்களுடைய சொந்த, அல்லது மனைவி / கணவர் / குழந்தைகளுடைய படிப்புக்குதான் பயன்படுத்தப்படவேண்டும். உங்களுடைய சகோதரர் / சகோதரிக்குப் பயன்படுத்தியிருந்தால் வரிச் சலுகை கிடையாது.*

www.StudyGuideIndia.com

**கடன் பெறுவதற்கு நான் ஏதாவது சொத்தையோ பத்திரங்களையோ அடமானம் வைக்கவேண்டுமா?**

*4 லட்சம் வரையிலான கல்விக் கடன்களுக்கு இது தேவையில்லை. அதேசமயம் கடன் ஆவணங்களில் மாணவர், அவருடைய பெற்றோர் அல்லது காப்பாளர் கையெழுத்திடவேண்டும்.*

*ஒருவேளை நீங்கள் 4 லட்சத்துக்கு மேல், 7.50 லட்சத்துக்குள் கடன் பெற்றால், இந்த ஆவணங்கள்மட்டும் போதாது. கூடுதலாக, நீங்கள் கடனைத் திரும்பச் செலுத்திவிடுவீர்கள் என்று உத்திரவாதம் அளித்து ஒருவர் கையெழுத்திடவேண்டும்.*

*7.5 லட்சத்துக்குமேல் உள்ள கடன்களுக்கு நீங்கள் ஏதேனும் சொத்து அல்லது முதலீட்டுப் பத்திரங்களை வங்கிக்குத் தரவேண்டியிருக்கும். உதாரணமாக:* National Savings Certificates (NSC), *காப்பீட்டு (இன்ஷூரன்ஸ்)ப் பத்திரங்கள், கிஸான் விகாஸ் பத்ரா, மற்ற பத்திரங்கள், வங்கி முதலீடுகள், அரசாங்க முதலீடுகள், பங்கு (ஷேர்) முதலீடுகள் (வங்கி அதனை ஏற்றுக்கொண்டால்), வாகனம், வீடு, நிலம், தங்கம், மற்ற சொத்துகள்.*

*இப்படி நீங்கள் வழங்கும் சொத்து அல்லது முதலீட்டுப் பத்திரம்தான் வங்கிக்கான உத்திரவாதம். நீங்கள் கடனைத் திரும்பச் செலுத்தாவிட்டால் அவர்கள் அதனை விற்றுத் தங்களுக்குச் சேரவேண்டிய தொகையைத் திரும்பப் பெற்றுக்கொல்வார்கள். 4 லட்சத்துக்கு மேற்பட்ட கடன்களுக்கு வங்கிகள் தனி நபர் உத்திரவாதம் கேட்கலாம், சொத்து / முதலீட்டுப் பத்திரங்களைக் கேட்கலாம், அல்லது இரண்டையும் கேட்கலாம். நீங்கள் கடனைத் திரும்பச் செலுத்தாவிட்டால் வங்கி அந்தத் தொகையை உங்களுக்கு உத்திரவாதம் வழங்கியவரிடமிருந்து பெறலாம், அல்லது அவர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம்.*

**நான் ஒரு நடுத்தர வர்க்கக் குடும்பத்தைச் சேர்ந்தவன். என் தந்தை வேலைக்குச் செல்வதில்லை. எங்களுக்குத் தொடர்ச்சியான வருமானம் என்று எதுவும் இல்லை. சொத்துகளோ, வேறு முதலீடுகளோ இல்லை. நான் கல்விக் கடன் பெற ஏதேனும் வாய்ப்பு உள்ளதா?**

*நிச்சயமாக கல்விக் கடன் என்பது உங்களுடைய படிப்புத் திறமையைப் பொறுத்து வழங்கப்படுகிறது. அந்தக் கடன் சரியான நேரத்தில் திரும்பச் செலுத்தப்படவேண்டும். அதை உறுதி செய்யவேண்டியது உங்கள் பொறுப்பு. திறமை உள்ள எவருக்கும் படிப்பதற்கான வாய்ப்பு தரப்படவேண்டும் என்ற நோக்கத்துடன் வங்கிகள் பலவிதங்களில் உதவுகின்றன:*

- *அடிப்படைக் கல்வி பெற விரும்பும் ஏழைகள்*
- *மேற்படிப்பு / தொழிற்படிப்பு / தொழில்நுட்பக் கல்வி பெற விரும்பும் சிறந்த மாணவர்கள்*

www.StudyGuideIndia.com

**கல்விக் கடனில் எந்தெந்தச் செலவுகள் அடங்கும்? கல்விக் கடன் பெற்றபின்னர் மற்ற செலவுகளுக்காக எனக்குக் கூடுதல் பணம் தேவைப்பட்டால் என்ன செய்வது?**

- கல்விக் கடன் உங்களுடைய ட்யூஷன் ஃபீஸுடன் முடிந்துவிடுவதில்லை. படிப்பு சம்பந்தமான மற்ற செலவுகளுக்கும் அது பொருந்தும். இதை உங்களுடைய வங்கியிடம் கேட்டு உறுதி செய்துகொள்ளுங்கள். ஒவ்வொரு வங்கிக்கும் இந்த விதிமுறைகள் மாறும். பொதுவாக இதில் இடம்பெறும் செலவுகள்:

1. கல்லூரி / பள்ளி கல்விக் கட்டணம்
2. விடுதிக் கட்டணம்
3. தேர்வுக் கட்டணம், நூலகம் / ஆய்வகக் கட்டணம்
4. டெபாசிட் தொகை (திரும்பப் பெறுவது அல்லது திரும்பப் பெறமுடியாதது), கட்டடக் கட்டணம் இவற்றுக்கு ரசீது வழங்கப்பட்டால்மட்டுமே வங்கி ஏற்றுக்கொள்ளும்
5. புத்தகங்கள், சீருடைகள், உபகரணங்கள், கம்ப்யூட்டர் போன்றவற்றை வாங்குவதற்கான செலவுகள்
6. கல்விச் சுற்றுலா, ப்ராஜெக்ட் / ஆய்வு வேலை தொடர்பான செலவுகள்
7. உங்களுடைய படிப்புக்குக் கம்ப்யூட்டர் தேவைப்பட்டால் அதை வாங்கும் செலவையும் சில வங்கிகள் ஏற்றுக்கொள்கின்றன
8. வெளிநாட்டுப் படிப்புக்கான பயணச் செலவுகள்

உங்களுடைய வங்கியைத் தொடர்புகொண்டு அவர்கள் எந்தெந்தச் செலவுகளுக்குக் கல்விக் கடன் வழங்குகிறார்கள் என்று உறுதி செய்துகொள்ளுங்கள்.

**கல்விக் கடனுக்கு வட்டி விகிதம் அதிகம் என்பதால், எனக்கு வேலை கிடைத்தவுடனேயே நான் அந்தத் தொகையைத் திரும்பச் செலுத்திவிட விரும்புகிறேன். இதற்கு ஏதாவது அபராதம் விதிக்கப்படுமா?**

மற்ற கடன்களுக்கும் கல்விக் கடனுக்கும் இடையே ஒரு முக்கியமான வித்தியாசம், பெரும்பாலான வங்கிகள் இதனை முன்கூட்டியே திரும்பச் செலுத்துகிறவர்களிடம் அபராதம் எதையும் வசூலிப்பதில்லை.

இருந்தாலும் உங்களுடைய வங்கியிடம் இதைப்பற்றி விசாரித்துவிடுவது நல்லது. சில வங்கிகளில் நீங்கள் படிப்பை முடித்து, அல்லது வேலை கிடைத்து 6 முதல் 12 மாதங்களுக்குள் கடனைத் திரும்பச் செலுத்திவிடலாம் என்று நிபந்தனை வைத்திருக்கலாம்.

www.StudyGuideIndia.com

**நான் கல்விக் கடன் பெற்றபின்னர் இன்னொரு வங்கி எனக்கு அதே கடனைக் குறைந்த வட்டி விகிதத்தில் வழங்க முன்வருகிறது. நான் என் கல்விக் கடனை இங்கிருந்து அங்கே மாற்றிக்கொள்ளமுடியுமா?**

முடியும். ஆனால் இதற்கு உங்களுடைய இப்போதைய வங்கி ஏதேனும் கூடுதல் கட்டணங்களை விதிக்கும் (Refinance Charge - உதாரணமாக 1%). இப்போது உங்களுடைய இரண்டாவது வங்கி இப்போதைய வங்கியைவிட 1% குறைவான வட்டி விகிதத்தில் கடன் வழங்க முன்வந்தால் உங்களுக்கு லாபமும் இல்லை, நஷ்டமும் இல்லை. ஆகவே நன்கு யோசித்து, கணக்கிட்டு அதன்பிறகு முடிவெடுங்கள்.

**என்னுடையெ பெற்றோர் இருவருமே வேலை செய்கிறார்கள். எங்களிடம் போதுமான சேமிப்பு உள்ளது, அதனால் என்னுடைய படிப்புச் செலவுகளைத் தாராளமாக ஏற்றுக்கொள்ளமுடியும். ஆனாலும் நான் கடன் பெறுவதுதான் நல்லது என்று என் நண்பர் சொல்கிறார். உண்மையா?**

இல்லை. நீங்களே சொந்தமாகச் செலவழித்துப் படிக்கமுடியும் என்றால், அதுதான் நல்லது. காரணம், ஒரு கடன் பெறுவது என்றால் அதில் நிறைய பராமரிப்பு வேலைகள் உள்ளன. முடிந்தால் அவற்றைத் தவிர்த்துவிடுங்கள். நிஜமாகவே உங்களுக்குத் தேவை இருந்தால்மட்டும் கல்விக் கடனுக்கு விண்ணப்பம் செய்யுங்கள். இந்தத் திட்டத்தின் நோக்கமே படிப்புக்காகச் செலவழிக்கமுடியாத ஏழை மாணவர்களுக்கு உதவுவதுதான்!

**நான் ஒரு குக்கிராமத்தைச் சேர்ந்தவன். எங்கள் ஊரில் வங்கிகள் எவையும் இல்லை. நான் எங்கே கல்விக் கடனுக்கு விண்ணப்பம் போடுவது?**

உங்கள் ஊருக்கு அருகில் உள்ள நகரத்தில் வங்கிகள் நிச்சயம் இருக்கும். அவற்றை அணுகுங்கள்.

**என்னுடைய கல்விக் கடன் நிராகரிக்கப்பட்டுவிட்டது. அது ஏன் என்று நான் தெரிந்துகொள்ளமுடியுமா?**

முடியும். ஒரு வங்கி உங்களது விண்ணப்பத்தை நிராகரிக்கும்போதே அதற்குக் காரணம் சொல்வார்கள். அப்படிச் சொல்லாவிட்டால் தகவல் அறியும் உரிமை(RTI)ச் சட்டத்தின்படி நீங்கள் விண்ணப்பம் அனுப்பிக் காரணம் கேட்கலாம். இதில் உங்களுக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எங்களுக்கு ஓர் ஈமெயில் அனுப்புங்கள்: info@studyguideindia.com

**உதவித்தொகை (ஸ்காலர்ஷிப்) பெறுவது அல்லது கல்விக் கடன் பெறுவது எது சிறந்தது?**

நீங்கள் இரண்டுக்குமே முயற்சி செய்யலாம். எங்களுடைய இணைய தளத்தில் உள்ள "கல்வி உதவித்தொகை' பிரிவைப் பார்த்து விவரம் தெரிந்துகொள்ளுங்கள். உங்களுடைய முழுப் படிப்புக்கும் உதவித் தொகை கிடைத்தால் ரொம்ப நல்லது. சில சமயங்களில் கல்வி உதவித் தொகை என்பது ஒரு சிறிய தொகையாக இருக்கும், அது உங்களுடைய முழுப் படிப்புச் செலவுக்கும் போதாது. ஆனாலும் நீங்கள் அதனை முடிந்த அளவு பயன்படுத்திக்கொள்ளலாம். இன்றைக்குப் பல நிறுவனங்கள், நல அமைப்புகள், அறக்கட்டளைகள், அரசு சார்பற்ற தனியார் அமைப்புகள், மாநில / மத்திய அரசாங்கங்கள் மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகைகளை வழங்குகின்றன. நீங்கள் இவற்றில் ஒன்றுக்குமட்டும்தான் விண்ணப்பிக்கவேண்டும் என்று எந்தக் கட்டாயமும் இல்லை. உங்களுக்குத் தகுதி உள்ள எல்லா உதவித் தொகைகளுக்கும் விண்ணப்பம் அனுப்புங்கள். அவற்றைப் பெற முயற்சி செய்யுங்கள்.

**'எப்படியும் நமக்குக் கடன் கிடைக்கப்போகிறது, நாம் அமெரிக்கா / இங்கிலாந்துக்குச் சென்று படிக்கலாம்' என்று என் நண்பர் சொல்கிறார். உங்கள் ஆலோசனை என்ன?**

கல்விக் கடன் பெறுமுன் ஒருமுறைக்கு இரண்டு முறை யோசித்துக்கொள்ளுங்கள். கடன் வாங்குவது சாதாரண விஷயம் அல்ல, அது இலவசமும் இல்லை. உங்களுக்குக் கடன் வழங்கும் வங்கி அதனை ஏதாவது ஒருவிதத்தில் உங்களிடமிருந்து திரும்பப் பெற்றே தீரும். நீங்கள் கடனைத் திரும்பச் செலுத்தாவிட்டால், அதற்குச் சரியான காரணம் இல்லாவிட்டால் வங்கி உங்களை விடாது. ஆகவே, நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கும் படிப்பின்மீது உங்களுக்கு உண்மையான ஆர்வமும் உந்துதலும் இருக்கிறதா என்று உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள். அந்தத் துறையில்தான் நீங்கள் உங்களுடைய எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள விரும்புகிறீர்களா என்று யோசியுங்கள். அந்தப் படிப்பை உங்களால் பூர்த்தி செய்யமுடியும், அந்தத் துறையில் வேலை வாங்கமுடியும், கடனைத் திரும்பச் செலுத்தமுடியும் என்கிற நம்பிக்கை உங்களுக்கு வேண்டும். அந்த நம்பிக்கை இல்லாவிட்டால், கடன் வாங்காதீர்கள். அது உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் உங்களுடைய சொத்துகளுக்கும் பெரிய சுமையாகவே இருக்கும்.

***என்னுடைய கல்விச் செலவுகள் முழுவதற்கும் (100%) கடன் கிடைக்குமா?***

பெரும்பாலும் அப்படிக் கிடைக்காது. நான்கு லட்சத்துக்கு மேற்பட்ட கடன்களில் இந்தியப் படிப்புகளுக்கு 5%, வெளிநாட்டுப் படிப்புகளுக்கு 15% குறைத்துக்கொண்டுதான் வங்கிகள் கடன் வழங்கும். அதாவது, அவர்கள் உங்களுடைய மொத்தச் செலவுகளில் 85% முதல் 95%வரைதான் வழங்குவார்கள். மீதப் பணத்துக்கு நீங்கள்தான் ஏற்பாடு செய்யவேண்டும். ஒருவேளை உங்கள் கல்விக் கடன் நான்கு லட்சத்தைவிடக் குறைவு என்றால் முழுத் தொகைக்கும் கடன் கிடைக்கும்.

www.StudyGuideIndia.com

**நான் என்னுடைய கல்விக் கடனுக்கு ஏதேனும் கையாளல் கட்டணம் (Processing Fee) செலுத்தவேண்டுமா?**

பெரும்பாலும் வங்கிகள் கல்விக் கடன்களுக்குக் கையாளல் கட்டணம் எதையும் வசூலிப்பதில்லை. அதுவும் வங்கியைப் பொறுத்து மாறும்.

**நான் எப்போது கடனைத் திரும்பச் செலுத்தவேண்டும்?**

பொதுவாகக் கல்விக் கடன்கள் ஐந்து முதல் ஏழு வருடங்களுக்குள் திரும்பச் செலுத்தப்படவேண்டும். ஒருவேளை தொகை பெரியதாக இருந்தால் நீண்ட காலம் எடுத்துக்கொள்ளலாம். சிறு கடன்கள் முடிந்தவரை சீக்கிரமாகவே திரும்பச் செலுத்தப்படவேண்டும். கல்விக் கடன்களுக்கான வருமான வரிச் சலுகைகள் எட்டு வருடங்கள்வரைதான் உண்டு. ஒருவேளை நீங்கள் எட்டு வருடங்களாகியும் கல்விக் கடனைத் திரும்பச் செலுத்தவில்லை என்றால் வருமான வரிச் சலுகைகள் எவையும் உங்களுக்குக் கிடைக்காது.

**கல்விக் கடனுக்கு விண்ணப்பிக்கும்போது என்னென்ன ஆவணங்கள் தேவைப்படும்?**

இதுவும் வங்கியைப் பொறுத்து மாறுபடும். நீங்கள் விண்ணப்பப் படிவம் பெறும்போதே வங்கி ஓர் ஆவணப் பட்டியலை வழங்கும். அவர்கள் பொதுவாகக் கேட்கும் ஆவணங்கள்:

1. நீங்கள் விரும்பும் படிப்பில் சேர்வதற்கான அனுமதி / கல்வி உதவித் தொகை விவரங்கள்
2. கட்டணங்கள் / இதர செலவுகள்
3. உங்களுடைய முந்தைய தகுதித் தேர்வின் சான்றிதழ் மற்றும் மதிப்பெண் பட்டியல்
4. புகைப்படங்கள்
5. முந்தைய ஆறு முதல் 12 மாதங்களுக்கான வங்கி அறிக்கை / கடந்த சில வருடங்களுக்கான வருமான வரி அறிக்கை
6. வருவாய் ஆதாரம், சொத்துகள், கடன்கள் போன்றவை
7. உங்களுக்குச் சொந்தமாக வங்கிக் கடன் இல்லாவிட்டால், அடையாளச் சான்றிதழும் வழங்கவேண்டியிருக்கும்.

**வங்கிகள் சில குறிப்பிட்ட கல்வி நிறுவனங்களில் சேர்பவர்களுக்குமட்டும்தான் கடன் வழங்குவார்களா?**

சில வங்கிகள் அப்படிச் செய்வதுண்டு. சில கல்வி நிறுவனங்களும் சில வங்கிகளோடு இணைந்து இதற்கான ஏற்பாடுகளைச் செய்கின்றன. ஆகவே நீங்கள் அந்தக் குறிப்பிட்ட கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கு அந்த வங்கியிலிருந்து சுலபமாகக் கடன் பெறலாம்.

www.StudyGuideIndia.com

இதுபற்றி உங்களுடைய கல்வி நிறுவனம் மற்றும் வங்கியில் விசாரித்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

**கல்விக் கடன் பெறுவதில் வேறு ஏதேனும் பலன் உண்டா?**

1. சில வங்கிகள் மாணவிகளுக்கு அரை சதவிகிதம் முதல் ஒரு சதவிகிதம்வரை குறைவான வட்டியில் கடன் வழங்குகின்றன
2. சில வங்கிகள் தனிநபர் விபத்துக் காப்பீடு வழங்குகின்றன
3. சில வங்கிகள் குழு ஆயுள் காப்பீடு வழங்குகின்றன

**என் சகோதரி கல்விக் கடன் பெற்றிருக்கிறார், அதனால் எனக்குக் கடன் கிடைக்காமல் போயிவிடுமா? ஒரு குடும்பத்திலிருந்து இத்தனை பேர்தான் கல்விக் கடன் பெறவேண்டும் என்று ஏதாவது கட்டுப்பாடு உண்டா?**

அப்படி எந்தக் கட்டுப்பாடும் இல்லை. ஆனால் உங்களுடைய குடும்பத்தால் இந்தக் கடனைத் திரும்பச் செலுத்தமுடியுமா என்பதைமட்டும் ஆராய்ந்து உறுதி செய்வார்கள். ஒருவேளை உங்கள் சகோதரி நான்கு லட்சத்துக்கு மேல் கடன் பெற்றிருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அதற்கு அவர் ஒரு சொத்துப் பத்திரத்தை அடமானமாக வைத்திருந்தால், நீங்களும் அதே பத்திரத்தை வைத்துக் கடன் பெறலாம். ஆனால் அதற்கு அந்தச் சொத்தின் மதிப்பு அதிகமாக இருக்கவேண்டும். வங்கி அதனை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**கல்விக் கடனுக்குக் காப்பீடு கிடைக்குமா?**

கிடைக்கும். சில வங்கிகள் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி உங்களுடைய கல்விக் கடனைப் பாதுகாக்கும் காப்பீடு ஒன்றை எடுத்துக்கொள்ளச் சொல்வார்கள். ஒருவேளை வங்கியால் அந்தக் கடனை உங்களிடமிருந்து வசூலிக்கமுடியாவிட்டால், காப்பீட்டிலிருந்து அந்தத் தொகை வசூலிக்கப்படும்.

**கல்விக் கடன் என்னிடம் எப்படி வழங்கப்படும்? காசாகவா?**

கல்விக் கட்டணம் உங்களுடைய கல்லூரி அல்லது கல்வி நிறுவனத்துக்கு நேரடியாக வழங்கப்பட்டுவிடும். அதன்பிறகு ஒவ்வொரு வருடமும் மாணவர்கள் தங்களுடைய செலவைத் தனிப் படிவத்தில் நிரப்பி விண்ணப்பம் அனுப்பவேண்டும். இதும் கல்லூரி / கல்வி நிறுவனத்துக்கு நேரடியாக அனுப்பப்பட்டுவிடும். வெளிநாட்டு நிறுவனங்கள் என்றால் இந்தத் தொகை அந்த நாட்டுக் கரன்ஸியில் வழங்கப்படும். அதற்கான பரிமாற்றச் செலவைப் பெரும்பாலும் மாணவர்தான் ஏற்கவேண்டியிருக்கும்.

நீங்கள் கல்விக் கடனுக்கு விண்ணப்பிக்கும்போது இந்த எளிய 'செக்லிஸ்ட்'டைப் பயன்படுத்தலாம். கடன் பெறும்போது உங்களிடம் கேட்கப்படுகிற பெரும்பாலான விஷயங்கள் இங்கே உள்ளன

www.StudyGuideIndia.com

| வ. எண் | கேள்வி | ஆம் / இல்லை / விவரம் |
|---|---|---|
| | உங்களுக்கு நிஜமாகவே கல்விக் கடன் தேவையா? | |
| | நீங்கள் இந்தியக் குடிமகனா? | |
| | நீங்கள் விரும்பும் படிப்பில் சேரக் கல்லூரியின் அனுமதி கிடைத்துவிட்டதா? | |
| | அந்தப் படிப்பு அங்கீகரிக்கப்பட்டதா? | |
| | அது முழு நேரப் படிப்பா அல்லது பகுதி நேர / தபால்முறைப் படிப்பா? | |
| | உங்கள் கல்லூரியிலிருந்து செலவு அறிக்கையைப் பெற்றுவிட்டீர்களா? | |
| | உங்கள் கல்வி நிறுவனம் ஏதேனும் வங்கிகளோடு இணைந்து சுலபக் கடனுக்கு ஏற்பாடு செய்திருக்கிறதா? | |
| | கடன் பெறத் தேவையான எல்லா ஆவணங்களும் என்னிடம் உள்ளதா? | |
| | இந்த வங்கி வழங்கும் வட்டி விகிதம் என்ன? | |
| | கடனைப்பெறுவதற்குச் சேவைக் கட்டணமோ கையாளல் கட்டணமோ உண்டா? | |
| | உங்களுடைய செலவில் எவ்வளவு கல்விக் கடனாகக் கிடைக்கும்? மீதமுள்ள தொகைக்கு நீங்கள் ஏற்பாடு செய்யமுடியுமா? | |
| | நீங்கள் கடனை முன்கூட்டியே திரும்பச் செலுத்தினால் ஏதாவது அபராதம் உண்டா? ஆம் எனில், எவ்வளவு? | |
| | கடனை வேறு வங்கிக்கு மாற்ற விரும்பினால் என்ன / எவ்வளவு அபராதம் வசூலிக்கப்படும்? | |
| | கடன் பெறுவதற்குப் பிணையாக நீங்கள் எந்தவிதமான ஆவணங்களைத் தரவேண்டியிருக்கும்? அதற்கு ஏற்பாடு செய்துவிட்டீர்களா? | |
| | படிப்பை முடித்து எவ்வளவு காலத்தில் நான் கடனைத் திரும்பச் செலுத்தத் தொடங்கவேண்டும்? | |
| | படிப்பை முடித்தபின் என்ன வருமான வரிச் சலுகை கிடைக்கும்? இந்தப் படிப்புக்கு வருமான வரிச் சலுகை உண்டா? | |
| | கல்விக் கடன் காலகட்டம் எவ்வளவு? எட்டு வருடங்களைவிட அதிகமா? | |
| | கடனுக்கான காப்பீட்டை யார் எடுப்பார்கள்? | |
| | ஆயுள் காப்பீடு, வட்டி விகிதத்தில் சலுகை என்பதுபோன்ற கூடுதல் பலன்கள் எனக்குக் கிடைக்குமா? | |
| | வெளிநாட்டுக்குப் பணம் அனுப்புவதால் ஏதேனும் கூடுதல் செலவுகள் உண்டா? அதை யார் செலுத்துவார்கள்? | |

கீழே உள்ள பட்டியலில் கல்விக் கடன் வழங்கும் சில வங்கிகளைப்பற்றிய விவரங்கள் உள்ளன. இவற்றைத் துல்லியமாகத் தருவதற்கு எங்களால் முடிந்தவரை முயன்றுள்ளோம். ஆனால் இந்த விவரங்கள் அடிக்கடி மாற்றப்படுவதாலும் மற்ற வங்கிக் கொள்கைகளாலும் சில விவரங்கள் தவறாக அமைந்துவிடலாம். ஆகவே வங்கி இணைய தளத்தைப் பார்த்தோ, அருகில் உள்ள கிளையைத் தொடர்புகொண்டோ சரியான விவரங்களை உறுதி செய்துகொள்ளுங்கள்.

www.StudyGuideIndia.com

| வஎண் | வங்கியின் பெயர் | அதிக பட்சக் கடன் உதவி - இந்தியாவில் படிக்க | அதிகபட்சக் கடன் உதவி - வெளிநாட்டில் படிக்க | வட்டி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | HDFC | ரூ. 15 லட்சம் | ரூ. 20 லட்சம் | 13%-14% |
| 2 | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி | ரூ. 10 லட்சம் | ரூ. 20 லட்சம் | 11.0-12.25% |
| 3 | சிண்டிகேட் வங்கி | ரூ. 10 லட்சம் | ரூ. 20 லட்சம் | 11.75%-12.25% |
| 4 | பேங்க் ஆஃப் பரோடா | ரூ. 10 லட்சம் | ரூ. 20 லட்சம் | 11.00-13.00% |
| 5 | இந்தியன் வங்கி | ரூ. 10 லட்சம் | ரூ. 20 லட்சம் | 13.5-13.75% |
| 6 | பேங்க் ஆஃப் இந்தியா | ரூ.10 லட்சம் | ரூ. 20 லட்சம் | 12.5-13.0 % |
| 7 | யுனைடட் பேங்க் ஆஃப் இந்தியா | ரூ.10 லட்சம் | ரூ. 20 லட்சம் | 10.95%-11.7% |
| 8 | பேங்க் ஆஃப் ராஜஸ்தான் | ரூ.10 லட்சம் | ரூ. 20 லட்சம் | 11% |
| 9 | கனரா வங்கி | ரூ.10 லட்சம் | ரூ. 20 லட்சம் | 11.00-13.25% |
| 10 | Oriental Bank of Commerce | ரூ.10 லட்சம் | ரூ. 20 லட்சம் | 11.75-12.5% |

**கல்விக் கடன் மற்றும் தகவல் அறியும் உரிமை(RTI)ச் சட்டம்:**

நீங்கள் அனைத்து ஆவணங்களையும் முறைப்படி சமர்ப்பித்திருந்தால், எந்தப் பிரச்னையும் இல்லாமல் கடன் கிடைக்கவேண்டும். ஆனால் எதார்த்தத்தில் அப்படி நிகழ்வதில்லை. குறிப்பாக கிராமப்புற மாணவர்கள் பல சவால்களைச் சந்திக்கிறார்கள். வங்கி மேலாளர் தகுதி உள்ள ஒருவருடைய விண்ணப்பத்தை நிராகரிக்கவேமுடியாது. அவர்கள் அப்படிச் செய்தால் அதற்கு நீங்கள் காரணம் கேட்கவேண்டும், அதை எழுத்தில் தரும்படி வலியுறுத்தவேண்டும். அதற்கெல்லாம் முன்பாக, நீங்கள் பணிவோடு கடன் கேட்பது அவசியம். சில மாணவர்களின் பழகும்தன்மை அதிகாரிகளுக்கு எரிச்சலூட்டலாம். அவர்கள் உங்களுக்குக் கடன் தராமல் இருக்க ஒரு காரணத்தைக் கண்டுபிடித்துவிடலாம். வங்கி அதிகாரிகளுக்குப் பல நெறிமுறைகள், கட்டுப்பாடுகள் உள்ளன. கிராமப்புற மாணவர்கள் சந்திக்கும் சில பிரச்னைகள், அவற்றுக்கான தீர்வுகளை இங்கே தொகுத்துத் தந்திருக்கிறோம்:

**சவால்கள் / பிரச்னைகள்** : வங்கி உங்களுடைய கடன் விண்ணப்பப் படிவத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது.

**தீர்வுகள்**: வங்கி மேலாளரைச் சந்திக்க முயற்சி செய்யுங்கள், விண்ணப்பப் படிவத்தை ஏற்க மறுப்பதற்குக் காரணம் கேளுங்கள். சில வங்கிகள் விண்ணப்பங்களை இணையம் வழியாக ஆன்லைனில்மட்டுமே ஏற்றுக்கொள்கின்றன. இல்லாவிட்டால் நீங்கள் பதிவுத் தபால்மூலம் அனுப்பலாம், அதை அனுப்பியதற்கான சான்று கைவசம் இருப்பது அவசியம்.

www.StudyGuideIndia.com

**சவால்கள் / பிரச்னைகள் :**
விண்ணப்பப் படிவத்தை வாங்கிக்கொண்டுவிட்டார்கள். ஆனால் அதற்கு அடையாளமாக Acknowledgement ஏதும் தரவில்லை.

**தீர்வுகள்:** விண்ணப்பப் படிவத்தைப் பதிவுத் தபால்மூலம் அனுப்புவதில் பிரச்னை வரும் என்று நினைத்தால், நேரில் சென்று விண்ணப்பம் பெற்றுக்கொண்டதற்கான அத்தாட்சி ஆவணம் ஒன்றைப் பெற முயற்சி செய்யுங்கள்.

**சவால்கள் / பிரச்னைகள்** : என்னுடைய கடன் விண்ணப்பம் பற்றி வங்கியிலிருந்து எந்தப் பதிலும் இல்லை.

**தீர்வுகள்:** பொதுவாக எல்லா வங்கிகளும் 30 நாள்களுக்குள் உங்களுடைய விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்து பதில் அனுப்பவேண்டும். அப்படி நடக்கவில்லை என்றால் அதற்கான காரணத்தைப் பணிவாகக் கேளுங்கள். அப்போதும் பதில் வராவிட்டால் "நான் தகவல் அறியும் சட்டத்தின்படி கோரிக்கை அனுப்பலாமா?' என்று விசாரியுங்கள். அதுவும் பயன் தராவிட்டால் நிஜமாகவே தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்திதான் உங்கள் விண்ணப்பத்தின் இப்போதைய நிலையை அறியமுடியும்.

**சவால்கள் / பிரச்னைகள்** : விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. ஆனால் அதற்குக் காரணம் ஏதும் தரப்படவில்லை.

**தீர்வுகள்**: உங்கள் விண்ணப்பம் ஏன் நிராகரிக்கப்பட்டது என்று அறியும் உரிமை உங்களுக்கு உண்டு. இதற்காக நீங்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி கோரிக்கை அனுப்பலாம். பொதுவாக இந்தக் கோரிக்கை எழும்போது வங்கிகள் காரணம் தருவதில்லை, கடனே கொடுத்துவிடுவார்கள். சரியான காரணம் இல்லாமல் அவர்கள் உங்கள் விண்ணப்பத்தை நிராகரித்தாலோ, தாமதப்படுத்தினாலோ அந்த வங்கி சட்டச் சிக்கல்களில் மாட்டிக்கொள்ளும்.

**கல்விக் கடன் தொடர்பாக RTI (தகவல் அறியும் உரிமைச் சட்டம்) எப்படிப் பயன்படுத்துவது?**

ஒரு வெள்ளைத் தாளில் உங்களுடைய கேள்விகளை எழுதுங்கள். அதனை அந்த வங்கிக் கிளை அல்லது தலைமை அலுவலகத்தின் Public Information Officer'க்கு அனுப்பவேண்டும். இந்தக் கடிதத்தின் தலைப்பு "Application Under Right To Information Act 2005/Section 6' என்று இருக்கவேண்டும் இந்தச் சட்டத்தின்படி இதற்கென்று தனி விண்ணப்பப் படிவமெல்லாம் தேவை இல்லை. உங்களுடைய முகவரி, வங்கி முகவரி, தலைப்பு, கேள்வி, அதற்கான கட்டணம் ஆகியவைதான் முக்கியம். இந்தக் கடிதத்தை ஆங்கிலத்திலும் எழுதலாம், உள்ளூர் மொழி(தமிழ்)யிலும் எழுதலாம்.

www.StudyGuideIndia.com

உங்களுடைய தகவல் அறியும் விண்ணப்பத்துடன் ரூ 10/ கட்டணம் செலுத்தவேண்டும். தமிழ் நாட்டில் இந்தக் கட்டணத்தைச் செலுத்தும் முறைகள்:

- ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா வங்கிக் கிளைகளில் தகவல் அறியும் உரிமைச் சட்டக் கணக்கில் நேரடியாகச் செலுத்தலாம், அவர்கள் தரும் ரசீதை உங்களுடைய தகவல் அறியும் விண்ணப்பத்துடன் இணைத்து பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும்
- சம்பந்தப்பட்ட வங்கிக் கிளைக்குச் சென்று பணமாகவும் செலுத்தலாம். கண்டிப்பாக ரசீது வாங்கிக்கொள்ளவேண்டும்
- கோர்ட் ஃபீஸ் ஸ்டாம்ப் எனப்படும் நீதிமன்ற ஆவணங்களின்வழியாகவும் செலுத்தலாம்

**உதவித் தொகைகள் மற்றும் இதர நிதி உதவிகள்:**

இந்தியாவில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் பல தகுதி உள்ள மாணவர்கள் தங்களது இலக்கை எட்டுவதற்கு உதவுகின்றன. பட்டப் படிப்பு, மேற்படிப்பு, முனைவர் படிப்பு, அதற்கு மேலே உள்ள படிப்புகள் என்று பல நிலைகளில் கல்வி கற்பவர்களுக்கு நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன. இவை பொருளாதாரரீதியில் பின்தங்கிய மாணவர்கள் தங்கள் கனவுகளை நிஜமாக்கிக்கொள்ள உதவுகின்றன.

'ஸ்காலர்ஷிப்' எனப்படும் உதவித்தொகைமட்டுமே மாணவர்களுக்கான நிதி ஆதரவுமட்டுமல்ல, பலவிதமான மக்களுக்குக் கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் சாதனமாகவும் அது திகழ்கிறது. மேற்படிப்புக்கான செலவுகள் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டிருப்பதால், மிகச் சிறந்த மாணவர்களால்மட்டுமே அதனை எட்டமுடியும். இங்கே உதவித் தொகைகள் அவர்களுக்குத் துணை புரிகின்றன. இந்தியாவில் வழங்கப்படும் உதவித் தொகைகள் தனிநபர் முன்னேற்றத்துக்குமட்டுமல்ல, ஒட்டுமொத்தத் தேச முன்னேற்றத்துக்கும் ஆதாரமாக நிற்கின்றன.

**இந்தியாவில் உள்ள பல்வேறு நிறுவனங்களால் வழங்கப்படும் உதவித் தொகைகள், இதர சலுகைத் திட்டங்கள்:**

1. அரசுத் துறைகள் (கல்வித் தகுதி அடிப்படையிலான உதவித் தொகைகள், மாவட்ட / மாநில அளவில் முதலாவதாக வருகிறவர்களுக்குத் தரப்படும் உதவித் தொகைகள் போன்றவை)
2. பல்வேறு நலத்திட்டத் துறைகள். உதாரணமாக, BC / MBC / SC / ST மாணவர்களுக்கான உதவித் தொகைகள்
3. பல அரசு, தனியார் நிறுவனங்களால் வழங்கப்படும் சிறுபான்மையினருக்கான உதவித் தொகைகள்
4. பல அரசு, தனியார் நிறுவனங்களால் வழங்கப்படும் பெண்களுக்கான உதவித் தொகைகள்

www.StudyGuideIndia.com

5. பொருளாதார ரீதியில் பின்தங்கிய மாணவர்கள் பல அரசு, தனியார் மற்றும் சமூக அமைப்புகள், அரசு சாராத நிறுவனங்கள், அறக்கட்டளைகள் போன்றவற்றில் விண்ணப்பம் செயலாம். உதாரணமாக, "அகரம் அறக்கட்டளை'
6. பல கல்வி நிறுவனங்களும் உதவித் தொகைகளை வழங்குகின்றன. உதாரணமாக SRM, VIT, அண்ணா பல்கலைக்கழகம், பல பல்கலைக்கழகங்களின் மாணவர் அமைப்புகள் போன்றவை
7. வாழ்க்கையில் நன்கு உயர்ந்த தனிநபர்களும் மற்ற சிலருக்கு உதவுவதற்காகக் கல்வி உதவித் தொகைகளை வழங்குகிறார்கள். இதுவும் தற்போது பரவலாகியுள்ளது.

*சில முக்கியமான உதவித்தொகை அமைப்புகள்:*

நீங்கள் உதவித் தொகை பெறுவதற்குப் பல வழிகள் உண்டு. தனி நபர்களில் தொடங்கி அரசு, தனியார், அரசு சாராத அமைப்புகள்வரை பலரும் மாணவர்களுக்கு உதவுகிறார்கள். (www.StudyGuideIndia.com) இணைய தளத்துக்குச் சென்று "ஸ்காலர்ஷிப்' என்ற பகுதியைப் படியுங்கள். பல விவரங்கள், வழிமுறைகளைத் தெரிந்துகொள்ளுங்கள்.

**1. தமிழக அரசாங்கத்தின் முதல் பட்டதாரி இலவசக் கல்வித் திட்டம்:**

BC, MBC மற்றும் (DNC) பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்கள் கீழ்க்காணும் பட்டப் படிப்புகளில் சேரும்போது அவர்களுக்கு இலவசக் கல்வித் திட்டம் பொருந்தும்: 3 வருடக் கலை / அறிவியல் பட்டப் படிப்புகள் (B.A., B.Sc., B.Com, போன்றவை), 3 வருட பாலிடெக்னிக் பட்டயப் படிப்புகள், தொழில்முறைப் பட்டப் படிப்புகள் (மருத்துவம், பொறியியல், விவசாயம், கால்நடை மருத்துவம், சட்டம், இந்திய மருத்துவம் போன்றவை). 2010ம் ஆண்டில், பொறியியல் பிரிவில்மட்டும் 1.67 லட்சம் விண்ணப்பங்கள் வந்தன. அதில் 78000 (46.71%) முதல் தலைமுறைப் பட்டப் படிப்பு மாணவர்கள்.
***நிபந்தனை:*** மாணவர்களின் பெற்றோருடைய மொத்த வருடாந்திர வருமானம் 50,000 ரூபாயைவிடக் குறைவாக இருக்கவேண்டும். அவர்கள் தங்கள் குடும்பத்தின் முதல் பட்டதாரியாக இருக்கவேண்டும். இந்த உதவித்தொகை குறித்த கூடுதல் விவரங்கள், விண்ணப்பப் படிவங்களை இங்கே பெறலாம்:
www.tn.gov.in/bcmbcmw/forms/form-fresh-schship.pdf

**2. SRM**

எஸ்.ஆர்.எம். கல்வி நிறுவனம் +2 தேர்வில் ஒவ்வொரு தமிழக மாவட்டத்திலும் முதல் இரண்டு இடங்களைப் பெறும் மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை வழங்குகிறது. இதுதவிர CBSE தேர்வில் முதல் இடத்தைப் பெறும் மாணவருக்கும் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இவர்கள் எஸ்.ஆர்.எம். குழுமத்தைச் சேர்ந்த ஏதேனும் ஒரு

www.StudyGuideIndia.com

கல்வி நிறுவனத்தில் (பொறியியல், மருத்துவம், மேலாண்மை, கலை, அறிவியல், ஹோட்டல் மேலாண்மை, பத்திரிகைத்துறை) சேர முடிவெடுத்தால் அவர்களுடைய கல்விக் கட்டணம், மெஸ் (உணவுக்) கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் அனைத்தும் இந்தக் கல்வி உதவித் தொகையில் அடங்கும். இதுதவிர மாதம் ரூ 1000/ மற்ற செலவுகளுக்காக வழங்கப்படும். அவர்கள் வேறு மாநில / மத்திய அரசுக் கல்வி நிறுவனங்களில் சேர்ந்தால் அவர்களுடைய படிப்பு முடியும்வரை கல்விக் கட்டணம் உதவித் தொகையாக வழங்கப்படும். இதற்காக நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய

முகவரி:
The Dean (Admissions),
SRM University, SRM Nagar,
Kattankulathur – 603203, Tamil Nadu,
Phone: (044) 27452270
Ext: 1451 / 27455715,
E-mail: dean@admissions.srmuniv.ac.in

**3. VIT**

வி.ஐ.டி. பல்கலைக்கழகம் IGNITE உதவித்தொகைகள் நாடுமுழுவதிலும் உள்ள சிறந்த மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்தியாவின் மிகச் சிறந்த தனியார் பல்கலைக்கழகங்களில் ஒன்றான வி.ஐ.டி.யில் இவர்கள் இணைந்து படிக்கலாம், அதன்மூலம் அவர்களுடைய பொறியியல் கனவுகள் நிஜமாகச் சிறந்த அடித்தளம் அமைத்துத் தரப்படுகிறது. இந்த உதவித்தொகையின் முக்கிய அம்சங்கள்: ஒவ்வொரு மாநிலத்திலும் முதல் 3 இடங்களைப் பிடிக்கும் மாணவர்களுக்கு 100% கல்விக் கட்டணச் சலுகை, வி.ஐ.டி. நடத்தும் VITEEE (Vellore Institute Of Technology Engineering Entrance Examination) தேர்வில் முதல் 50 இடஞ்களைப் பிடிக்கும் மாணவர்களுக்கு 100% கல்விக் கட்டணச் சலுகை, இதே தேர்வில் 51 முதல் 100வது இடம்வரை பிடிக்கும் மாணவர்களுக்கு 50% கல்விக் கட்டணச் சலுகை. இந்த உதவித்தொகை நாடுமுழுவதும் உள்ள 202 சிறந்த மாணவர்களுக்கு உதவும், இதற்காக நீங்கள் தொடர்புகொள்ளவேண்டிய

முகவரி:
VIT University,
Vellore- 632014
Tamil Nadu, India,
Tel: 91-416-2243091/93,
Fax: 91-416-2243092, 91-416-2240411
E-mail: vitadmission@ yahoo.com,
Official Website: www.vit.ac.in

www.StudyGuideIndia.com

*4. அகரம் அறக்கட்டளை*


*அகரம் அறக்கட்டளை ஏழை மாணவர்களுக்கான கல்வி உதவிகளை வழங்கிவருகிறது. நீங்கள் 10ம் வகுப்பு, 12ம் வகுப்பில் நல்ல மதிப்பெண் பெற்று, மேற்படிப்புக்கான வசதி இல்லாமல் தடுமாறுகிறவர் என்றால், இந்த அறக்கட்டளையைத் தொடர்புகொண்டு விண்ணப்பம் அனுப்பலாம். அதற்கான*

*முகவரி:*

Agaram Foundaiton,
No.29,Vijay Enclave KrishnaStreet,
T.Nagar, Chennai - 600 017
Tamil Nadu, India.
Telephone : +91 44 4350 6361
Mobile : +91 98418 91000
Email : info@agaram.in

www.StudyGuideIndia.com

# எங்களது மற்ற வெளியீடுகள்




StudyGuideIndia.com
Guiding you... ALL WAYS

- ✓ Information on 22000 colleges and 4500 courses across India.
- ✓ Student's education queries answered by 150 mentors.
- ✓ Education loan and scholarship information.

JobListIndia.com
Your Search Stops Here

- ✓ Looking for your dream job?
- ✓ Free Career Counseling by experts from India & Abroad.
- ✓ Post your Resumes Free!

WinCA
Wintelligence Career Academy

- ✓ Education Guidance Training
- ✓ Career Guidance Training
- ✓ Corporate Training
- ✓ IT Training

www.StudyGuide